செய்தி வெளியீடு எண்: 436 நாள்: 09.09.2016

# செய்தி வெளியீடு

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 17 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் செப்டம்பர் 2016 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 10.09.2016 அன்று காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 17 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சோ.மதுமதி
ஆணையாளர்

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | தூய மார்க் நடுநிலை பள்ளி, எண்.123/62, வேப்பேரி நெடுஞ்சாலை, பெரியமேடு, சென்னை – 3.( கால்நடை மருத்துவ கல்லூரி) |
| 2 | இராயபுரம் | சி.எஸ்.ஐ. ராஜகோபால் உயர்நிலைப் பள்ளி, இராயபுரம் சென்னை – 13. |
| 3 | பெரம்பூர் | சென்னை உயர்நிலைப் பள்ளி, 2, சர்மா நகர் மெயின் ரோடு, சர்மா நகர், சென்னை – 39. (சர்மா நகர் பஸ் நிலையம் அருகில் ) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மேல்நிலைப்பள்ளி , எண்1, பாலவாயல் சாலை, அயனாவரம். சென்னை–23. (அயனாவரம் மார்கெட் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | அரசு ஆதி திராவிட நல உயர்நிலைப்பள்ளி , பாரதியார் தெரு, மதுரவாயல், சென்னை–95. ( மதுரவாயல் தபால் நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, 22/2, சிவன் கோவில் வடக்கு மாட வீதி வில்லிவாக்கம் சென்னை–49. (வில்லிவாக்கம் பஸ் டிப்போ எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | வரதராஜன் மழலையர் மற்றும் தொடக்க பள்ளி , எண்.23, சார்லஸ் நகர், மெயின் ரோடு, திருவொற்றியூர், சென்னை– 19. |
| 8 | ஆவடி | அங்கூர் வித்யா மந்தீர் , எச். வி.எப். எஸ்டேட் ரோடு, எச். வி.எப். எஸ்டேட், சென்னை–54 (வள்ளுவர் வாசுகி திருமண மண்டபம் அருகில்) |
| 9 | ஆர்.கே.நகர் | சென்னை தொடக்கப் பள்ளி, 91, சேனியம்மன் கோயில் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை –81 (அரசினர் புறநகர் மருத்துவமனை அருகில்) |
| 10 | தி.நகர் | குறிஞ்சிநகர் வீட்டு உரிமையாளர் சங்க கட்டிடம், குறிஞ்சி நகர் முதல் மெயின் ரோடு, இராமாபுரம்,சென்னை– 600 089. (SRM கல்லூரி அருகில்) |
| 11 | மயிலாப்பூர் | செயின்ட் சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, எண்.143A சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை.4 (சாந்தோம் சர்ச் அருகில்) |
| 12 | பரங்கிமலை | நேரு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை–114. |
| 13 | தாம்பரம் | செம்பாக்கம் நகராட்சி அலுவலக வளாகம், செம்பாக்கம், சென்னை.73 (காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில்) |
| 14 | சைதாப்பேட்டை | ஆல் ஏஞ்சல்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, 130–ஏ, பாரதிதாசன் காலனி, கே.கே,நகர்,சென்னை–600 078. (மாம்பலம் வட்டாட்சியர் அலுவலகம் அருகில்) |
| 15 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலை பள்ளி, எண்:35, வீராசாமி தெரு, எழும்பூர், சென்னை–600 008. (மோத்தி மஹால் அருகில்) |
| 16 | சேப்பாக்கம் | சென்னை தொடக்கப்பள்ளி, நாகப்ப தெரு, புதுப்பேட்டை, சென்னை–2. ( கொய்யாத்தோப்பு உறவுசிங் போர்டு பின்புறம்) |
| 17 | சோழுங்கநல்லூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, சோழிங்கநல்லூர், சென்னை–119. (ஆவின் பால்பண்ணை அருகில்) |

ஒம்/- சோ.மதுமதி
ஆணையாளர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**